

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றியம் தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கங்கை கொண்டான் அனைத்தலையூரில் நடைபெற்ற மாநில அளவிலான மகளிர் மின்னொளி கபாடி போட்டியில் கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று போட்டியை துவக்கி வைத்தார்.அப்போது மானூர் ஒன்றிய அ.தி.மு.க.முன்னாள் செயலாளர் பரமசிவம், அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்து கொண்டார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி, என்.மாலை ராஜா, மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. சு.சுப்பிரமணியன், ஆ.கா.மணி, ராஜ், கிரகாம்பெல்,உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## மேட்டுப்பாளையத்தில் 12 செ.மீ. மழை பதிவு!

கோவை, நவ. 5 -

தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மேட்டுப்பாளையம் பில்லூர் அணை பகுதியில் 12 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

பில்லூர் அணை 12 செ.மீ., குன்னூர் 11 செ.மீ., பில்லிமலை எஸ்டேட், அதார் எஸ்டேட் தலா 9 செ.மீ., பரளியாறு8 செ.மீ., ஆலக்கரை7 செ.மீ., தக்கலை, கோத்தகிரி, கின்னகோரை தலா 6 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

### சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூர் – சிவகங்கை – மானாமதுரை – காரைக்குடி ஆகிய

# சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சென்னை, நவ. 5 -

சிவகங்கை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சிவகங்கை மாவட்டம் 185 - திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் (BL.A2) கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

கூட்டம் நடைபெறும் நாள் ஒன்றியம் / நகரம் / பேரூர், இடம் விவரம் வருமாறு:-

**05.11.2024**

காலை 10.00 -திருப்பத்தூர் தெற்கு - சண்முகா பாரடைஸ் - கோட்டையிருப்பு, பகல் 11.00 -திருப்பத்தூர் பேரூர் மாவட்ட கழக அலுவலகம் திருப்பத்தூர், பகல் 12.00 -திருப்பத்தூர் வடக்கு -இளையாத்தங்குடி கோவில் மண்டபம், பகல் 1.00 - நெற்குப்பை பேரூர் நெற்குப்பை - ரைஸ்மில், மாலை 3.00 எஸ்.புதூர், எஸ்.புதூர் சமுதாயகூடம், மாலை 4.00 - சிங்கம்புணரி வடக்கு, அண்ணாமன்றம் - சிங்கம்புணரி, மாலை 5.00 - சிங்கம்புணரி பேரூர் அண்ணாமன்றம் - சிங்கம்புணரி, மாலை 6.00 - சிங்கம்புணரி தெற்கு,செட்டியார் மடம் ஏரியூர்

**06.11.2024 -**

காலை 10.00 - கல்லல் மேற்கு, மானகிரி BKC மஹால், காலை 11.00 - சாக்கோட்டை மேற்கு, முத்துகணேஷ் மஹால், கோட்டையூர், பகல் 12.00 -கோட்டையூர் பேரூர், KRS Building கோட்டையூர், பகல் 1.00 - கானாடுகாத்தான் பேரூர், சிங்காரம் செட்டியார் மஹால் - நேமத்தான்பட்டி, மாலை 3.00 - பள்ளத்தூர் பேரூர், கட்சி அலுவலகம் பள்ளத்தூர்

186 - சிவகங்கை சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் (BL.A2) கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது

**05.11.2024**

காலை 10.00 - சிவகங்கை வடக்கு மாயா மஹால் - சிவகங்கை, பகல் 11.00 - சிவகங்கை தெற்கு ஒன்றிய அலுவலகம் - சிவகங்கை, பகல் 12.00 - மானாமதுரை கிழக்கு, இளையான்குடி (1பூத்), திருப்புவனம் கிழக்கு (3 பூத்), திருப்புவனம் மேற்கு ( 2 பூத்), தெற்கு ஒன்றிய அலுவலகம், பகல் 1.00 -சிவகங்கை நகர், தெற்கு ஒன்றிய அலுவலகம், மாலை 3.00 - காளையார்கோவில் கிழக்கு, ஆரோக்கிய கார்டன் புளியடிதம்மம், மாலை 5.00 - காளையார்கோவில் தெற்கு, யோக அன்பாலயம் காளையார்கோவில்

**06.11.2024**

காலை 10.00 - கல்லல் கிழக்கு, மணிமேகலை திருமண மஹால் - கல்லல், காலை 11.00 - காளையார்கோவில் வடக்கு & நாட்டரசன்கோட்டை பேரூர், சமுதாயக்கூடம் - நாட்டரசன்கோட்டை

187 - மானாமதுரை(தனி) சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் (BL.A2) கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது -

**05.11.2024**

காலை 10.00 - திருப்புவனம் மேற்கு & திருப்புவனம் பேரூர், மருதுபாண்டியர் திருமண மஹால் மேல்புறம், காலை 11.00 - திருப்புவனம் கிழக்கு, மருதுபாண்டியர் திருமண மஹால் கீழ்புறம், மாலை 3.00- மானாமதுரை நகர் அருணாச்சி மஹால் மானாமதுரை, மாலை 4.00 - மானாமதுரை மேற்கு, சாந்திமுருகன் திருமண மண்டபம். மாலை 5.00 - மானாமதுரை கிழக்கு, அனுசுயா திருமண மஹால்.

**09.11.2024**

காலை 10.00 - இளையான்குடி வடக்கு & பேரூர் ஆயிரவைசியா மஹால் - இளையான்குடி, காலை 11.00 - இளையான்குடி மேற்கு, ஆயிரவைசியா மஹால் - இளையான்குடி, மாலை 3.00 - இளையான்குடி கிழக்கு சூராணம், மாலை 4.00 - இளையான்குடி தெற்கு, சாலைகிராமம் - த்ரிரோஷஸ் மஹால்

184 - காரைக்குடி சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் (BL.A2) கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது

**05.11.2024**

காலை 10.00 - தேவகோட்டை தெற்கு, சமுதாயக்கூடம் - முப்பையூர், காலை 11.00 - தேவகோட்டை வடக்கு VMS திருமண மண்டபம் - தேவகோட்டை, பகல் 12.00 - தேவகோட்டை நகர், நகர் கழக அலுவலகம் - தேவகோட்டை, மாலை 3.00 - கண்ணங்குடி, சமுதாயக்கூடம் உஞ்சனை, மாலை 4.00 - சாக்கோட்டை கிழக்கு & கண்டனூர், புதுவயல் பேரூர், சொர்ணா திருமண மண்டபம் - புதுவயல், மாலை 6.00 - காரைக்குடி நகர், கலைஞர் பவள விழா மாளிகை - காரைக்குடி

இவ்வாறு அவர் கூறினார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.ஆனந்த், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ரீதர் ரொட்ரிகோ, குளச்சல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.பி.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டு BLA2 சரிபார்ப்பு மற்றும் திருத்த பணிகள் மேற்கொள்வது தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள். கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட கூட்டத்தில் 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி பாகம் முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமையில் இராமநாதபுரத்தில் தனியார் மஹாலில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ். சுதர்சன், கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் கே.கருப்பையா, ஆதித்யன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை நவ.5 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக் கையில் கூறியிருப்ப தாவது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை, விராலிமலை, கந்தர்வக்கோட்டை ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சாரிபார்ப்பு மற்றும் வாக்காளர் சேர்த்தல் முகாம் நடைபெறுகிறது. இதில் 1.1. 2025 ல் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை (31.12.2006க்கு முன் பிறந்தவர்கள்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படலாம்.

இந்த வாக்காளர் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் சிறப்பு முகாம் 16.11.2024 சனி, 17.11.2024 ஞாயிறு மற்றும் 23.11.2024 சனி, 24.11.2024 ஞாயிறு ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இந்த சிறப்பு முகாமில் புதிதாக பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6, ஆதார் விபரம் சேர்க்க படிவம் 6 பி., பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, எழுத்துபிழைகள், முகவரி மாற்றம் செய்ய படிவம் 8 ஆகியவற்றை பயன் படுத்தி வழங்கலாம்.

மேலும் இந்த படிவங்களை 29.10.2024 முதல் 28.11.2024 வரை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வழங்கலாம். மேலும் இந்த பணியில் புதிதாக தேர்ந்தேடுக்கப்பட்ட வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், சார்பு அணி நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகி கள், கழக செயல்வீரர்கள் அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும்

என்றும், வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் குறித்து மாநகர, ஒன்றிய,

நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கழகத்தினர் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2) தெரிவித்துபணியினை செம் மையாக செய்திட வேண்டும் என்றும், பெயர் சேர்த்தல், நீக்கல் விவரங் களின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட ஏதுவாக மாவட்டக் கழகத்திடம் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஒப்படைத்திட வேண்டும்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தென்காசி தெற்கு மாவட்டம் - ஆலங்குளம், கடையநல்லூர்

# சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை!



தென்காசி, நவ.5-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆலங்குளம், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் இன்று (5.11.2024 செவ்வாய்க்கிழமை) தென்காசி சிவந்தி நகர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது என தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது பற்றி அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் (எனது தலைமையில்) இன்று (5ம் தேதி) காலை 10 மணி அளவில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர்,ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ் குமார் ஆதித்தன் பங்கேற்று ஆலோசனை களை வழங்க உள்ளார்.

அதுபோன்று மாலை 4 மணியளவில் நெல்லை மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் கடையநல்லூர் தொகுதி பார்வையாளர் நௌஷாத் பங்கேற்று ஆலோசனை களை வழங்க உள்ளார்.

ஆகவே இந்நிகழ்வுகளில் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாநில,மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர் கள்,(BLA2) வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: பாக முகவர்கள் கலந்தாய்வு,வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சம்பந்தமாக.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் நவ.9 வரை மழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ. 5 -

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நவ.9ம் தேதி வரை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் கேரள கடலோர பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின்மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் தீவிரமாக உள்ளது.

இவற்றின் தாக்கத்தால், தமிழகத்தில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இன்று முதல் நவம்பர் 9ம் தேதி வரை இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழகத்தில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தில் 16 செ.மீ. மழை பதிவாகி உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி

**நவம்பர் 5 (2009)**



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம்வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் ‘அம்பேத்கர் விருது’ வழங்கி சிறப்பித்தார்.

“கழகம், கழகம் என்று தன்வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம்பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தீப்பொறி ஆறுமுகம்

**நவம்பர் 5 (2016)**



சிறிய வயதிலேயே பேச்சாளராகி, கழக மேடைகளில் எந்த கருத்தையும் தைரியமாக எடுத்துச் சொல்லி, தமது பேச்சாற்றலால் பெரும் புகழ் பெற்று, தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், “இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, பெரியாரால் அப்போதே பாராட்டப்பட்டவர். இவருடைய பேச்சைக் கேட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் இவருக்கு “தீப்பொறி” என்ற அடைமொழியை குறிப்பிட்டு, பின்னர் காலப்போக்கில் “தீப்பொறி” என்றாலே இவரைக் குறிப்பிடும் அளவிற்கு பெயர் பெற்று விட்டார்” என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**